ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

---

# கந்தரலங்காரத்தில் இகர ஈற்றுச் சொற்கள்

---

**முனைவர் ம.சரளாதேவி,**

**தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர் (சுழற்சி-2),**

**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,**

**தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி),**

**திருப்பத்தூர்.**

## முன்னுரை

கந்தரலங்காரம் என்பது 15 ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட 108 பாடல்களைக் கொண்டதாகும். தமிழ்ச் சிற்றிலக்கிய வரிசையில் பாடப்பெற்ற முதல் அலங்கார நூலாகும். கந்தபெருமானின் பெருமையை எடுத்துரைப்பதோடு அறவாழ்வின் மகிமை, மரண பயத்தை வெல்லும் தன்மை, உலக வாழ்க்கையின் நிலையாமை, செல்வத்தின் நிலையற்ற தன்மை போன்றவற்றை எடுத்துரைக்கின்றது. அத்தகைய சிறப்புபொருந்திய இந்நூலில் எதுகை, மோனை போன்ற இலக்கணக்கூறுகளை

அதிகமாகக் கையாண்டுள்ளார். அதில் உயிர் ஈற்றுச் சொற்கள், மெய் ஈற்றுச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் உயிர் ஈற்றுச் சொற்களில் இகர ஈற்றுச் சொற்களை மட்டும் ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**அருணகிரிநாதர் வாழ்க்கை**

“அருணகிரிநாத சுவாமிகள் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவில் திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் தோன்றியவர். இளமையிலேயே தமிழ்மொழி, இலக்கணம், இலக்கியம், சைவத் திருமுறைகள், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கியவர். திருமுருகப்பெருமானை நோக்கி தேனூறும் தமிழ் மொழியில் பக்திப் பாடல்கள் பலவற்றை மிகவும் உன்னதமான சந்தப் பாடல்களாகப் பாடியருளியவர்.” (சிங்காரவேலு சச்சிதானந்தம், திரு அருணகிரிநாதர் அருளிய சுந்தர் அலங்காரம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வுக் கட்டுரை)

முருகனின் அருள்பெற்ற அருணகிரிநாதர் இயற்றிய கந்தரலங்காரம் நூலில் யாப்பின் தன்மைகள் அதிகம் நிறைந்துள்ளன.

**உயிர் ஈற்றுச் சொற்கள்**

அருணகிரிநாதர் இயற்றியுள்ள கந்தரலங்காரம் நூலில் சந்தப் பாடல்களில் உயிர் ஈற்றுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் அகரம், ஆகாரம், இகரம், உகரம், ஏகாரம், ஐகாரம் போன்ற உயிர் ஈற்றுச் சொற்களை மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

ஊகரம், எகரம், ஒகரம், ஓகாரம், ஔகாரம் போன்ற உயிர் ஈற்றுச் சொற்களைப் பயன்படுத்தவில்லை.

**இகர ஈற்றுச் சொற்கள்**

இகர ஈற்றுச் சொற்கள் நிலைமொழியாக நிற்க வருமொழியோடு புணரும்போது வல்லெழுத்தோ, மெல்லெழுத்தோ, இடையின எழுத்தோ, மிகுந்து வரலாம் என்றும் உயிருடன் புணரும் என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

**உடம்படுமெய்**

நிலைமொழி உயிருடன் புணரும்போது உடம்படுமெய் தோன்றும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

”இ, ஈ ஐவழி யவ்வும் ஏனை

உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் இருமையும்

உயிர்வரின் உடம்படு மெய்யென்று ஆகும்.” (நன்.162)

வருமொழியின் முதலில் உயிர் வந்தால் இ, ஈ, ஐ என்னும் எழுத்துகளின் பின்னே ய உடம்படு மெய்யாக வரும். அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துகளின் பின்னே வ உடம்படு மெய்யாக வரும். ஏ என்பதன் பின் ய, வ என்ற இரண்டும் உடம்படு மெய்யாக வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

தோணி+ இட்டு = தோணி**யி**ட்டு

கூரணி + இட்டணு =கூரணி**யி**ட்டணு

நேரணி + இட்டு = நேரணி**யி**ட்டு (கந்த. 3)

தாவடி + ஓட்டு = தாவடி**யோ**ட்டு

பாவடி + ஏட்டிலும் = பாவடி**யே**ட்டிலும் (கந்த.15)

துருத்தி +எனும்படி = துருத்தி யெனும்படி

தருத்தி+ உடம்பை = தருத்தியுடம்பை (கந்த.71)

இங்கே நிலைமொழியில் இகரம் வந்துள்ளதால் யகர உடம்படுமெய் இடம்பெற்றுள்ளது.

**வல்லொற்று மிகுதல்**

நிலைமொழியில் இகர ஈற்றுச் சொற்கள் வந்து வருமொழியில் கசதப வந்தால் வல்லொற்று மிகுந்து வரும்.

1. சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகும்.
2. ஓர் எழுத்துச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.
3. குற்றியலுகரச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.
4. வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.
5. சில மென்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.
6. சில உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.
7. முற்றியலுகரச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.
8. வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகும்.
9. அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் மிகும்.
10. மகர ஈற்றுச் சொற்களில் வல்லினம் மிகும்.

என்ற அடிப்படையில் இகர ஈற்றுச் சொற்களில் வல்லினம் மிகுந்து வந்துள்ள சொற்களை அருணகிரியார் அதிகமாகக் கந்தரலங்காரத்தில் கையாண்டுள்ளார்.

அருந்தி + சரவண = அருந்திச் சரவண

விரும்பி + கடலழ = விரும்பிக் கடலழ (கந்த.5)

கோழி + கொடிய = கோழிக் கொடிய (கந்த.20)

பத்தி +துறையிழி = பத்தித் துறையிழி

புத்தி +தாங்க = புத்தித் தாங்க

மெத்தி + குதிகொள்ள = மெத்திக் குதிகொள்ள

குத்தி +தரங்கொண் = குத்தித் தரங்கொண் (கந்த.35)

சுழி + தோடு= சுழித்தோடு

கழி + தோடு = கழித்தோடு

கொழி + தோடு = கொழித்தோடு

கிழி + தோடு = கிழித்தோடு (கந்த.36)

பத்தி + திருமுக = பத்தித் திருமுக

தித்தி + திருக்கு = தித்தித்திருக்கு

புத்தி + கமல = புத்திக் கமல

தத்தி +கரைபுர = தத்திக் கரைபுர (47)

பட்டி +கடாவில் = பட்டிக் கடாவில்

வெட்டி+ புறங்கண்ட= வெட்டிப் புறங்கண்ட

முட்டி +பொருத = முட்டிப் பொருத

கட்டி +புறப்பட = கட்டிப் புறப்பட (கந்த.64)

காவி +கமல= காவிக் கமல

தூவி +குலமயில் = தூவிக் குலமயில்

தாவி +படர = தாவிப் படர

பாவி + தனிமன =பாவித் தனிமன

**வேற்றுமை உருபு**

வேற்றுமை உருபு வெளிப்பட்டு வரும் இடங்களில் வருமொழியில் க,ச,த, ப வராததால் இயல்பாகப் புணர்ந்துள்ளது.

புத்தி + வாங்கி = புத்தியை வாங்கி

முத்தி + வாங்க = முத்தியை வாங்க

சத்தி + வாங்க = சத்தியை வாங்க (கந்த.48)

**மெல்லொற்று**

மகரம் ஈற்றெழுத்தாக வந்து புணர்ச்சியில் கெட்டு பின்னர் வருமொழிக்கு ஏற்ப வல்லொற்றாகவோ அல்லது மெல்லொற்றாகவோ மாற்றம் பெறும்.

"மவ்வீறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும்

வன்மைக்கு இனமாத் திரியவும் ஆகும்." (நன்.219)

மகரத்தை இறுதியாக உடைய சொற்கள் நான்கு கணங்களும் வந்து புணரும்போது இறுதியில் உள்ள மகர மெய் கெட்ட உயிரீறு போல நின்று புணரும் என்று நன்னூல் கூறுகின்றது.

இழியும்+ கவிக= இழியுங் கவிக

குழியும் +துயரும் = குழியுந் துயரும்

வழியும் + துயரும் = வழியுந் துயரும் (கந்த.56)

**இயல்பாதல்**

இயல்புப் புணர்ச்சி என்பது நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது, அவற்றின் வடிவத்தில் எந்த மாற்றமும் ஏற்படாமல் இயல்பாகப் புணர்வது இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

”விகார மனைத்தும் மேவலது இயல்பே” (நன்.153)

விகார வகையனைத்தும் அடையாதது இயல்புப் புணர்ச்சியாகும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

பொருவடி +வேலும்= பொருவடி வேலும்

மருவடி + வான = மருவடி வான

குருவடி +வாய் = குருவடிவாய் (கந்த.102)

**முடிவாக**

சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை ஒவ்வொரு நூலும் உயிர் மற்றும் மெய் ஈற்றுச் சொற்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. அவை இலக்கண நூலாக இருந்தாலும் இலக்கிய நூலாக இருந்தாலும் சரி இந்த இலக்கணக் கட்டமைப்பை விட்டு நீங்காமல் படைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இக்காலத்தில் வடமொழிச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்துவதன் விளைவாக இந்த இலக்கணக் கட்டமைப்பை நீக்கிவிட்டு பாலிஷ், பஸ்டாண்ட், பிரஷர், பிரஸ்டீஜ் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றோம். இதுபோன்ற ஆய்வுகள் முற்காலத்தில் எத்தகைய இனிமையான சொற்களை அக்காலத்தில் பயன்படுத்தியுள்ளனர் என்பதைத் புரிந்துகொண்டு அதைப் பின்பற்ற வழிசெய்யும்.

**துணைநூற் பட்டியல்**

1. கிருபானந்தவாரியார் (உ.ஆ) – கந்தரலங்காரம், வானதி பதிப்பகம், சென்னை.1975.
2. ச.திருஞானசம்பந்தம் - தொல்காப்பியம், எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2013.
3. சோம. இளவரசு - நன்னூல், எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.1992
4. சிங்காரவேலு சச்சிதானந்தம் - திரு அருணகிரிநாதர் அருளிய சுந்தர் அலங்காரம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வுக் கட்டுரை, www.kaumaram.com
5. சு.சக்திவேல், ச.இராஜேந்திரன் – சொற்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1994.